அரசகரும மொழிகள் திணைக்களம்

அரசகரும மொழித் தேர்ச்சி வாய்மூலப் பரீட்சை
**சிங்களம்/ தமிழ் ( மட்டம் I, II, III, )**

## விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல்கள்

01. அரசகரும மொழிகள் திணைக்களத்தின் www.languagesdept.gov.lk என்ற இணையத்தளத்தினுள் பிரவேசித்து நிகழ்நிலை ஊடாக மட்டுமே இவ் வாய்மூலப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

02. வருடத்தின் எந்தவொரு நாளிலும் இதற்கான விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிக்க முடியும்.

03. பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள், தமக்குரிய சேவை மட்டத்திற்காக விதிக்கப்பட்ட மற்றைய அரசகரும மொழித் தேர்ச்சி மட்டத்திற்கு மாத்திரமே விண்ணப்பித்தல் வேண்டும்.

04. இவ் வாய்மூலப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தில், எழுத்துமூல தகைமையை கட்டாயமாகப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் என்பதுடன், அது சம்பந்தமான தகவல்களை விண்ணப்பப் படிவத்தில் சரியாக உட்சேர்த்தல் வேண்டும். அத்துடன் உரிய சான்றிதழை, செவிமடுத்தல் திறன் மதிப்பீட்டுப் பரீட்சைக்கு சமுகமளிக்கும் போது கட்டாயமாக சமர்ப்பித்தல் வேண்டும்.

05. அரசகரும மொழிகள் திணைக்களத்தின் இணையத்தளத்தினுள் பிரவேசித்து, விண்ணப்பதாரிகள் கேட்கப்பட்டுள்ள விடயங்களுக்கு செல்லுபடியான தரவுகளை உட்சேர்த்தல் வேண்டும்

06. மாற்றுத்திறன் விண்ணப்பதாரியொருவர் எனில், அது தொடர்பான விபரங்களை விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடுதல் வேண்டும்.

07. விண்ணப்பதாரிகளின் வசதிக்காக இங்கு தமிழ் மொழியில் மாதிரி விண்ணப்பப்படிவங்கள் காட்டப்பட்டுள்ள போதிலும் நிகழ்நிலை விண்ணப்பப்படிவம் ஆங்கில மொழியிலேயே பிரசுரிக்கப்பட்டிருக்கும். அதற்கமைய ஆங்கில மொழியிலேயே விண்ணப்பப் படிவம் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும்.

08. வாய்மூலப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் உத்தியோகத்தர்கள் ஒவ்வொருவரும் உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்துதல் வேண்டும். அந்தந்த மட்டத்திற்குரிய பரீட்சைக் கட்டணங்கள் வருமாறு:

| **10/2025 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் சேவை மட்டம்** | **சம்பந்தப்பட்ட வகுதி** | **மற்றைய அரசகரும மொழித் தேர்ச்சி வாய்மூலப் பரீட்சை மட்டம்** | **கட்டணம் (ரூ.)** |
|---|---|---|---|
| மூன்றாம் நிலை/ சிரேஷ்ட மட்டம் | 1 | மட்டம் I | 2,000.00 |
| இரண்டாம் நிலை மட்டம் | 2 | மட்டம் II | 1,500.00 |
| ஆரம்ப மட்டம் | 3 | மட்டம் III | 1,000.00 |

09. பரீட்சைக் கட்டணத்தை, நாட்டின் எந்தவோர் இலங்கை வங்கிக் கிளை மூலமாகவும், இராஜகிரிய, இலங்கை வங்கிக் கிளையில் பேணிச் செல்லப்படுகின்ற "அரசகரும மொழிகள் ஆணையாளர் நாயகத்தின் 7041541 என்ற கணக்கிற்கு வரவு வைத்தல் வேண்டும் என்பதுடன், வங்கிக்கு பணம் செலுத்தும் படிவத்தில் (Cash deposit slip) பண வைப்பாளரின் பெயர் மற்றும் முகவரியைக் குறிப்பிடுவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில், வைப்பாளரின் பெயர், முகவரிக்கு மேலதிகமாக, வைப்பாளரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் குறிப்பிட்டு "Oral Exam" எனவும் குறிப்பிடுதல் வேண்டும்.

10. பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டில் கணினி மூலம் அச்சிடப்பட்ட இலக்கத்தையும் (நான்கு பிரிவுகளைக் கொண்ட) திகதியையும், அரசகரும மொழிகள் திணைக்களத்தின் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள விண்ணபப்படிவத்தில் உரிய கூண்டினுள் குறிப்பிடுதல் வேண்டும்.

11. பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டமையை உறுதிப்படுத்தும் வகையில் பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட வங்கிப் பற்றுச்சீட்டை செவிமடுத்தல் திறன் மதிப்பீட்டுப் பரீட்சைக்குச் சமுகமளிக்கும் போது கட்டாயமாக சமர்ப்பித்தல் வேண்டும். செவிமடுத்தல் திறன் மதிப்பீட்டுப் பரீடசைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் மூலப் பிரதயை சமர்ப்பிக்கத் தவறும் பட்சத்தில் மீண்டும் பணம் செலுத்துவதற்கு நேரிடலாம்.

12. பரீட்சைக் கட்டணமாகச் செலுத்தப்பட்ட பணம் எக்காரணம் கொண்டும் திருப்பிச் செலுத்தப்படமாட்டாது.

13. நிகழ்நிலை ஊடாக விண்ணப்பிக்கும்போது, விண்ணப்பதாரியினால் உட்சேர்க்கப்பட்ட தரவுகள் திணைக்களத்தினால் திருத்தப்பட மாட்டாது. எனவே, விண்ணப்பப்படிவத்தை பூர்த்திசெய்யும் போது, மிகக் கவனத்துடன் சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும்.